[8th March 1966

திரு. கே. ஏ. மதியழகன் : உள்துறை அமைச்சர் திரு. நந்தா அவர்களிடமிருந்து இந்தியப் பாதுகாப்பு விதிகளைப் பெரும்பாலும் பயன்படுத்தக் கூடாது, மற்ற சட்டங்களைத் தான் பயன்படுத்த வேண்டும் என்று தாக்கீது வந்திருக்கிறதா? அதன் அடிப்படையில் கைது செய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அரசாங்கத்திற்கு மத்திய அரசாங்கத்தினிடமிருந்தோ அல்லது வேறு யாரிடமிருந்தோ தாக்கீது ஒன்றும் வரவில்லை. ஆகையினால் அடுத்த கேள்விக்கு இடமில்லை.

திரு. செ. மாதவன் : இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே சமாதானம் ஏற்பட்டுவிட்டதால், ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்களில் எத்தனை பேர்கள் விடுதலை செய்யப்பட்டார்கள்? இல்லையென்றால் அதற்குக் காரணம் என்ன?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : நான் முன்பே கூறினேன், இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்களில் பலர் விடுதலை செய்யப்பட்டார்கள் என்று.

* 210 *Q.*—SRI M. KALYANASUNDARAM : } Will the
SRI A. KUNJAN NADAR : }
Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the number of "Left" communists still in detention under D.I.R., as on 17th January 1966; and

(*b*) when was the last review made by the Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) The number of "Left" Communists in detention under Defence of India Rules as on 17th January 1966 is 91; and

(*b*) the last review was made by the Government in November 1965.

திரு. கே. ஏ. மதியழகன் : இந்தப் பரிசீலனையின் போது என்ன முடிவுக்கு வந்தார்கள்? மீதியிருக்கிற திரு. ராமமூர்த்தி, திரு. வெங்கட்டராமன் போன்ற தலைவர்களை விடுதலை செய்வது பரிசீலனையில் இருக்கிறதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பாதுகாப்பு விதிகளின்படி 'டெடின்யூ'-ஆக வைக்கப்பட்டவர்கள் விஷயம் அவ்வப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பரிசீலனை செய்யப்பட்டு முடிவு எடுத்துக்கொள்ளப்பட்டு வருகிறது.

திரு. செ. மாதவன் : பாதுகாப்புக் கைதிகளுக்குக் கொடுக்கக் கூடிய வசதிகள் சம்பந்தமாக நம்முடைய மாநிலத்திலுள்ள விதிமுறைகள் மாற்றி அமைக்கப்படவேண்டும் என்ற கருத்தை நீதிமன்றம் தெரிவித்திருக்கிறது. அந்தக் கருத்து அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா?

8th March 1966]

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இப்பொழுது பாதுகாப்புக் கைதிகள் பற்றிய விதிகள் இருக்கின்றன. அவற்றை மாற்றி அமைப்பதாக உத்தேசமும் இல்லை. அதற்கு நிமித்தமும் இல்லை.

* 211 *Q.*—Sri M. KALYANASUNDARAM : Will the Hon. Chief Minister be pleased to state—

(*a*) the list of papers against which prosecutions have been launched under D.I.R. in connection with anti-Hindi agitation; and

(*b*) the present stage of the prosecutions?

The Hon. SRI M. BHAKTAVATSALAM :

(1)	Malai Murasu (Madras, Tirunelveli, Tiruchirappalli, Coimbatore, Madurai and Salem Editions).	Daily.
(2)	Dina Thanthi	Do.
(3)	Murasoli	Do.
(4)	Malai Mani	Weekly.
(5)	Swadesamitran	Daily.
(6)	Tamil Nad (Madurai)	Do.
(7)	Thenmozhi (Cuddalore)	Monthly.

Cases against all these papers except 'Thenmozhi' are pending trial in the Court.

திரு. கே. ஏ. மதியழகன் : சார், பாராளுமன்றத்திலே, சமீபத்திலே உள்துறை அமைச்சர் பேசும்போது, பத்திரிகைகள் பேரில் வழக்குத் தொடருவதற்கு முன் ஆல்-இந்தியா பத்திரிகையாளர் சம்மேளனத்தைக் கலந்து கொள்ளாமல் மாநில சர்க்கார் வழக்குகள் போடக் கூடாது, அப்படிப் போடப்பட்ட கேசுகளை வாபஸ் பெறவேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இந்த மாநிலத்திலே போடப்பட்டிருக்கும் வழக்குகளை வாபஸ் பெற முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பார்லிமெண்டில் என்ன கூறப்படுகிறது, என்ன கூறப்படவில்லை என்பதையெல்லாம் இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. இந்த வழக்குகளை வாபஸ் செய்ய எந்த நிமித்தமும் இல்லை.

திரு. செ. மாதவன் : பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பல பத்திரிகைகள் மேல் வழக்குகள் போடப் பட்டிருக்கின்றன. இந்தி எதிர்ப்பு சம்பந்தமாக எடுக்கப் பட்ட வழக்குகள் இன்னும் பெண்டிங்காக இருக்கின்றன. பின்னல் போடப் பட்ட வழக்குகள் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டுக்கும் வேறுபாடு ஏன் ? இவற்றையும் வாபஸ் வாங்க உத்தேசம் இருக்கிறதா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தி எதிர்ப்புச் சம்பந்தமாக போடப்பட்ட வழக்குகள் பற்றியது ஒரு விஷயம். பின்னல் எடுக்கப்பட்ட வழக்குகள் வேறு விஷயம். இரண்டுக்கும் வித்தியாசம் இருக்கிறது.